DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 183 /2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சேகர் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பழனிச்சாமி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 03.03.2022.

**முதல் விசாரணை:**

நான் பொள்ளாச்சியில் உள்ள ரங்கசமுத்திரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ரியல் எஸ்ட்டேட் தொழில் செய்து வருகிறேன். 2 வருடங்களுக்கு முன்னால் உடுமலை மகளிர் போலிசார் என்னை விசாரணைக்கு வரச் சொன்னார்கள். அப்போது ஆஜர் 2வது எதிரி கார்த்தியை தெரியுமா என்று கேட்டார்கள் எனது வியாபாரம் மூலம் தெரியும் என்று சொன்னேன். மற்றபடி மேற்படி எதிரிக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. மேற்டி விவரங்களை தான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன்.

**( சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

போலிசார் விசாரணையில் கடந்த 16.09.2020 அன்று 11.30 மணிக்கு ஆஜர் 2வது எதிரி கார்த்தி மற்றும் சகிலா மற்றும் சென்பக வள்ளி ஆகியேர் ஏற்பாட்டின் பேரில் பணம் ரூ.1000/- கொடுத்து அவர்கள் அனுப்பி வைத்த பிருந்தாதேவி என்பரோடு உல்லாசமாக இருக்கும்போது அனைத்து மகளிர் போலிசார் வந்ததாக எரிகளை கைது செய்து காவல்

நிலையத்திற்கு அழைத்து சென்றதாக கூறிவிட்டு தற்போது எதிரி பழக்கம் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 183 /2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அலியா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : முத்துராவுத்தார் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 03.03.2022.

**முதல் விசாரணை:**

நான் சூலூரில் வசித்து வருகிறேன் ஒர்க்சாப் வைத்துள்ளேன். உடுமலை குமரன் நகரில் க/எண்.53 ல் எனக்கு சொந்த வீடு உள்ளது. 01.09.2020 அன்று கார்த்தி என்பவருக்கு எனது வீட்டை வாடகைக்கு கொடுத்தேன் ஆஜர் 2 வது எதிரிதான் மேற்படி கார்த்தி. நான் வாடைக்கு விட்ட 15 நாட்கள் கழித்து உடுமலை அனைத்து மகளிர் போலிசார் என்னை விசாரணைக்காக அழைத்தார்கள். அப்போது எனது வீட்டில் விபச்சாரம் நடந்ததாக கூறி மகளிர் போலிசார் விசாரணை செய்தார்கள்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 183 /2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கலைச் செல்வன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 03.03.2022.

**முதல் விசாரணை:**

நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 16.09.2020ம் தேதி உடுமலை காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்தபோது உடுமலை காவல் நிலைய ஆய்வாளர் அழைத்ததின் பேரில் நானும் பெண் காவலர் சுருதி, சசிரேகா மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் உடுமலையில் உள்ள தாராபுரம் ரோட்டில் உள்ள சித்தக்குட்டை குமரன் நகரில் ரைடு சென்ற போது அங்கு க.எண்.53 என்ற வீட்டில் மேற்படி ஆஜர் எதிரிகள் கார்த்தி சகீலா செண்பக வள்ளி ஆகியோர் மற்றும் பிரவீனா என்பரும் அங்கிருந்தார்கள். அந்த வீட்டில் உள்ள மற்றொரு அரையில் பிருந்தாவும் சேகரும் அரைகுறை ஆடைவுடன் இந்தார்கள். ஆய்வாளர் பிருந்தா என்பவரை விசாரணை செய்தார்கள். அப்போது பிருந்தா என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக செண்பகவள்ளி என்பவரை அனுகியதாகவும், அதற்கு அவர் நான் கூப்பிடும்போது வந்து ஆண்களுடன் சேர்ந்திருந்தால் உரிய பணம் தருவதாக கூறியதன்பேரில் தான் மேற்படி

செயலில் ஈடுபட்டதாக கூறினார். மேலும் சேகர் என்பவர் ரூ.1000/- கொடுத்ததில் தனக்கு ரூ.500/- கொடுத்ததாக கூறினார். அங்கிருந்த மாருதி ரிட்ஸ் கார் மற்றும் அந்த வீட்டில் இருந்த 6 நபர்களையும் அழைத்துக்கொண்டு வந்து மகளிர் காவல் நிலையத்தில் ஆஜர் செய்தோம் இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ தேதியில் எனக்கு உடுமலை காவல் நிலையத்தில் பணி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆய்வாளர் என்னை சிறப்பு பணிக்காக அழைத்ததின் பேரில் நான் சென்றேன். மேற்படி வேறு ஒரு காவல் நிலைய ஆய்வாளர் சிறப்பு பணிக்கு அழைப்பு விடுத்து செல்லும்போது பொதுவாக காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் விவரத்தை பதிவு செய்து கொண்டுதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். மேற்படி குறிப்பிட்டவாறு பதிவு செய்து கொண்டுதான் நான் சென்றேனா என்றால் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் பதிவு செய்துள்ளார். சம்பவத்தன்று எத்தனை மணிக்கு யார்யார் சென்றோம் என்றால் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் நான் சசிரேகா, மற்றும் சுருதி ஆகியோர் காலை 11.00 மணி அளவில் புறப்பட்டோம். நான் எனது இரு சக்கர வாகனத்திலும் ஆய்வாளர் அவரது அரசு வாகனத்திலும் சம்பவ இடத்திற்கு சென்றார். சம்பவ இடத்திற்கு 11.00 மணிக்கு சென்று சேர்ந்தோம். சம்பவ இடம் உடுமலையில் இருந்து சுமார் 4,5 கிலோ மீட்டர் இருக்கும். இரு சக்கர வாகனத்தில் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். இந்திரா நகர் சித்தக்குட்டை என்ற பகுதி தொழில் நிறுவனம் மில், குடியிருப்பு நிறைந்த பகுதி என்றால் சரிதான். ரகசிய தகவலின் பேரில் தான் சம்பவ இடத்திற்கு சென்றதால் சோதனை பிடியாணை ஏதும் கொண்டு செல்லப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை ஆய்வாளருக்குதான் தெரியும். சம்பவ இடத்திற்கு சென்றவுடன் எங்களை பார்த்ததும் தப்பியோட முயன்றார்கள் நாங்கள் தடுத்துவிட்டோம். சம்பவ இடத்தில் உள்ள வீட்டை சுமார் ஒரு மணி நேரம் சோதனை செய்தோம். அங்கிருந்த எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட விவரம் எனக்கு தெரியவில்லை. புலன் விசாரணை முடியும் வரை உடன் இருந்தேன். அந்த சமயத்தில் சம்பவ இடத்தில் அருகில் இருந்த பொதுவான நபர்கள் யாரையும் நான் அழைக்கவில்லை. ஆய்வாளர் அதற்கான முயற்சி எடுக்கவில்லை என்றால் அருகில் யாரும் அப்போது இல்லை. நான் குறிப்பிட்டபடி எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் புள்ளி விவர கணக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளுக்கு எதிராக பொய்யான ஆவணங்கள் மூலம் தயார் செய்யப்பட்டதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் மக்கள் நெருக்கம் மட்டும் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்பதால்

உண்மையிலேயே சம்பவ இடத்திற்கு சென்று இருந்தால் பொது ஜன சாட்சிகளை சாட்சியாக இந்த வழக்கில் சேர்த்திருப்போம் இது பொய் வழக்கு என்பதால் தான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மகளிர் காவல் நிலைய ஆய்வாளருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.